**கதிர்காமம் பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 திசெம்பர் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கதிர்காமம் பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 88,500 பெறுமதியான கைவிரல் அடையாள இயந்திரம் நிலையான சொத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 113,000 தொகை மீளாய்வாண்டில் கிடைத்திருந்த போதிலும் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் நூலகத்தில் விலை குறிப்பிடப்படாத 800 புத்தகங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 103,122 தொகையான செலவினத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,750,865 ஆக இருந்ததுடன் கடன்கொடுத்தோர் பதிவேட்டின் படி ரூபா 2,577,196 ஆனமையால் ரூபா 173,669 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்ட நிதி மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் மொத்த செயற்பாட்டு மீண்டெழும் செலவினம் ரூபா 41,390,148 ஆக இருந்த போதிலும், ரூபா 41,350,148 பிழையாகக் குறிப்பிடப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 40,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது எசல பண்டிகைக்காக தற்காலிக மலசலகூடத்தை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 200,848 தொகையான பொருள் இருப்புக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 14,594 தொகையான உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்திற்காக கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னைய ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 302,657 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காகவும் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காகவும் கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,766,798 ஆக இருந்ததுடன் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 43,654,715 ஆக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் வரவு மீதியின் வேறுபாடான ரூபா 16,971 தொகை தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,410,680 கூட்டுத்தொகையான 06 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 35,806,268 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 1646 | மீளாய்வாண்டில் உழவு இயந்திரம் மற்றும் பவுசருக்காக ரூபா 1,732,318 தொகையான எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு என்பவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சபையில் சேவையாற்றி வேலையை விட்டுச் சென்ற, இடமாற்றலாகிச் சென்ற, மரணித்த 12உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 18,400 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.3.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

முன்னைய ஆண்டின் இறுதியில் அறிவித்தல் பதாதைகளுக்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 29,465 தொகை மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 129,795 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,305,728 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைவு ரூபா 3,435,523 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 ஆதனவரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 140(5) இன் பிரகாரம் 1997 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரிக் கட்டணம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 136 ஆம் பிரிவின் பிரகாரம் கடை வாடகை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) 2013 இன் எசல பண்டிகை நடைபெறுகின்ற கால எல்லையில் வியாபார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக நிலக்கூறுகளை வாடகைக்கு வழங்கும் போது குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக சத்தாதிஸ்ஸ மாவத்தையில் ரூபா 15,000 படி 19 ஆம் இலக்க முதல் 28 ஆம் இலக்க வரை 10 நிலக்கூறுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கூறுகள் அவர்களினால் உயர்ந்த தொகையில் ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) சபையினால் தற்காலிக வியாபார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக நிதிக்கூறுகளை வாடகைக்கு வழங்குவதற்காக கூறுவிலை கோரப்பட்டதன் பின்னர் கூறுவிலை சமர்ப்பிக்காத நிலக்கூறுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சுகின்ற நிலக்கூறுகளுக்காக முறையான பிரகாரம் அவைகளை வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் அவ்வாறு கூறுவிலை சமர்ப்பிக்காத ஏலத்தில் பெறப்பட்ட நிலக்கூறுகள் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 5,000 படி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட நிலக்கூறுகள் கூடுதலான தொகையில் ஏனைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டமை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) சபையினால் றுஹுணு பெரிய கதிர்காமம் ஆலயத்தில் 2013 இன் எசல பண்டிகையின் அனுசரணையாளர்களுக்காக விற்பனைக் கூடாரங்கள் மற்றும் கொடிகளைப் பொருத்துவதற்கு இடங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அனுசரணையாளர்களிடமிருந்து சபைக்கு அறவிடவேண்டிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உப விதிகளை அங்கீகரித்துக் கொள்ளாது ஒரு முச்சக்கர வண்டி உரிமையாளரிடமிருந்து ஆண்டிற்கு ரூபா 250 படி வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(உ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் சபையில் பதிவு செய்துள்ள அல்லது அச்சபை அங்கீகரித்த பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் உள்ள ஹொட்டேல் / 06 தங்குமிடங்களிலிருந்து உரிய ஆண்டிற்கு முன்னைய வருடத்தின் வருமானத்தில் 1% சதவீத்தை விஞ்சாத கட்டணம் உப விதிகளை விதித்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,500,000 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

(அ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மெய்மையாய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 151,582 பெறுமதியான 1898 நூலகப் புத்தகங்கள் தொடர்பான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த ஆண்டில் 04 சந்தர்ப்பங்களின் போது ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 59,064 பெறுமதியான முற்பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய கடிதத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களில் வீதி விளக்குகளை செயல்படுத்துவதற்கும் பராமரிப்பதற்குமான சேவை வழங்குபவராக நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாது மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 85,258 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் வீதி விளக்குகளை அமைக்கும் போது ஸ்தாபிக்கும் முறை, பொருத்தப்பட வேண்டிய விளக்குகளின்

வகை, எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இந்த கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 467,877 தொகையான எசல பண்டிகை ஊக்குவிப்புப் படியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கதிர்காமம் எசல பண்டிகை செயற்பாடுகளுக்காக பிரதேச சபையின் மூலம் 2012, 2013 ஆம் ஆண்டுகளின் போது தற்காலிக தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு அதற்காக ரூபா 2,994,395 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எசல பண்டிகைக்காக தொழிலாளர்களை ஈடுபடுத்திய இடங்கள், அந்த இடங்களுக்கான தொழிலாளர்களின் தேவை, தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக சேவை நேரங்களைத் தயாரித்தல், சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற தொழிலாளர்கள் குறிப்பிட்ட பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட காலப்பகுதியில் சேவையைச் செய்தமைக்கு மேற்பார்வை நடைமுறைகளைத் தயாரித்தல், அந்தந்த செயற்பாடுகளுக்காக அவற்றின் முக்கியத்துவம் மற்றும் தேவையின் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களின் அளவு போன்றவைகளை உள்ளடக்கி திட்டத்தை தயாரித்தல், தற்காலிகமாக சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுக்காக இலக்கத்துடனான தற்காலிக அடையாள அட்டையை வழங்குதல் போன்றவை மேற்கொள்ளப்படாமையினால் செலவிடப்பட்ட தொகை ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்தப்பட்டதா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஊ) தம்மறக்கீத மாவத்தையில் அமைந்துள்ள சபைக்குரிய 04 வீடுகள் தொடர்பாக சபையினால் பராமரிப்பு நடவடிக்கைகள் செய்யப்படாமை, அனுமதியற்ற முடியிருப்பாளர்களை அகற்றுதல் மற்றும் குறிப்பிட்ட பிரகாரம் வாடகையை அறவிடல் போன்றவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

(அ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்தும் போது மாதிரிப் படிவம் II அறிக்கை தாமதித்து அனுப்பப்பட்டமையினால் 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 99,156 தொகை மீளாய்வண்டின் போது மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 முதல் 19 ஆந் திகதி முதல் 2014 சனவரி 03 ஆந் திகதி வரை 07 வாகனத் தரிப்பிடங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 40 மற்றும் ரூபா 60 தொகையான 24 வருமானப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களுக்குரிய ரூபா 248,000 வருமானம் மற்றும் உரிய பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் அடியிதழ்களை சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.** **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்